செ.வெ.எண்: 386 நாள்: 18.06.2020

**உலக அளவில் கொரோனா நோய்த்தொற்று காரணமாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த நபர்கள் வெளிநாடுகளிலிருந்தும், வெளிமாநிலங்களிலிருந்தும் தமிழ்நாட்டுக்கு வருபவர்களுக்குத் அவர்களது சொந்த மாவட்டங்களிலேயே பணி செய்யவும் மற்றும் சுய தொழில் செய்வதற்கும் தேவையான வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சியினை வழங்குவதற்கு tnskill.tn.gov.in என்ற இணையதளத்தில் தாங்களாகவே பதிவு செய்து கொள்ளலாம் எனவும், மேலும் அரசு தனிமைப்படுத்தும் மையங்களிலும் அவர்களது பெயர்களை பதிவு செய்வதற்கான படிவங்களை வழங்கி பூர்த்தி செய்து அவர்களிடமிருந்து பெற்று அதனை பதிவேற்றம் செய்து அவர்களுக்கு உரிய பயிற்சியினை வழங்க அரசின் அறிவுரைகளின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

**மேலும் வெளிநாடுகளிலிருந்தும், வெளிமாநிலங்களிலிருந்தும் தமிழ்நாட்டுக்குத் திரும்பிய தொழிலாளர்கள் அவர்களுக்கு விருப்பமுள்ள தொழிலில் ஈடுபடவும், வேலைவாய்ப்பினை பெறவும் தேவையான பயிற்சியினை பெற்றுக்கொள்வதற்கு தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் அவர்களுக்கான வழிகாட்டு மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் வெளிநாடுகளிலிருந்தும், வெளிமாநிலங்களிலிருந்தும் தமிழ்நாட்டுக்குத் திரும்பிய தொழிலாளர்கள் வேலைவாய்ப்பினை பெறுவதற்கும், அதற்குத் தேவையான பயிற்சியினை பெருவதற்கும் உரிய படிவத்தை பெற்று பூர்த்தி செய்து வழங்கலாம் எனவும், மேலும் மாவட்ட அளவில் இவர்களுக்கான சேவை மையம் தொழிலாளர் நல அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது என்பதையும், தேவைப்படுவோர் 264549 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்புகொண்டு விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.**

---

செய்தி வெளியீடு : செய்தி - மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.